# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் அமெரிக்காவிலுள்ள பைத்துர் ரஹ்மான் பள்ளிவாயிலில்
## 22.06.2012 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

அல்லாஹ் நம்மீது செய்த பேரருளால் அவன் உலகை கொள்கை ரீதியாகவும், அமல்கள் ரீதியாகவும் சீர்திருத்துவதற்காக ஒருவரை இக்காலத்தில் அனுப்பினான். அவரை நாம் ஏற்றுக் கொண்டிருக்கின்றோம். ஆனால் நாம் அவ்வாறு ஈமான் கொண்ட பிறகும் கூட நம்மில் பலரது சொல்லுக்கும் செயலுக்கும் இடையில் முரண்பாடு உள்ளது. ஜமாஅத் சகோதரர்களில் பெரும்பான்மையானவர்களின் சொல்லும் செயலும் எவ்வாறிருக்க வேண்டுமோ அவ்வாறு இல்லை. பெரும்பாலானவர்களின் இயல்பில் அஹ்மதிய்யத் பிணைக்கப்பட்டுள்ளது என்பதில் சந்தேகமில்லை. அதாவது அவர்களிடம் நீங்கள் அஹ்மதிகளா? என்று கேட்டால் மாஷா அல்லாஹ் எங்கள் தந்தை வழிப்பாட்டனார், கொள்ளுப்பாட்டனார் கூட அஹ்மதிகளாக இருந்தனர்; சஹாபிகளாக இருந்தனர் என்று கூறுவர். இன்ன சம்பவங்கள் அவர்களது ஈமான் மற்றும் உறுதி பற்றி அஹ்மதிய்யா வரலாற்றில், சஹாபாக்களைப் பற்றிய வரலாற்றில் கூறப்பட்டுள்ளது என்று கூறுவர்.

இன்னும் சொல்வதாயின், சிலர் என்னிடம் கூட வந்து கூறுவர். தாங்கள் இன்ன சஹாபியின் சம்பவங்களைக் கூறினீர்கள். கடந்த பல குத்பாக்களில் சஹாபாக்களின் வாழ்க்கைச் சம்பவங்களைக் கூறி வருகிறேன். அவர் எங்கள் தாய்வழிப்பாட்டனார் தான், கொள்ளுப்பாட்டனார் தான் என்று கூறுவர். அஹ்மதிய்யத்தின் மீது இவர்கள் கொண்டிருந்த நம்பிக்கையாவது எதிரிகளின் எந்த தாக்குதலும் அவர்களை அஹ்மதிய்யத்திலிருந்து அகற்ற முடிந்ததில்லை. அவர்கள் உயிர், பொருள், கண்ணியம் ஆகியவற்றை தியாகமும் செய்தார்கள். அவர்களின் மூதாதையர்களும் செய்திருந்தனர். அவர்களுள் பலர் இங்கு அமர்ந்தும் உள்ளீர்கள். ஆனால் இன்னொன்றையும் நாம் மறுக்க முடியாது. நமது கண்களைத் திறந்து வைக்காதவரை சமுதாயத்தில் முன்னேற்றம் ஏற்பட முடியாது. நாம் நம்மை நாமே ஆய்வு செய்யாதவரை ஏற்பட முடியாது. அமல்களில் பலவீனமாக இருப்பவர்களும் அஹ்மதிகளில் அடங்கி உள்ளனர் என்பதையும் நம்மால் மறுக்க முடியாது. அல்லாஹ்வின் கடமைகளை நிறைவேற்றுவதில் பலவீனம் உள்ளது. அடியார்களின் கடமையை நிறைவேற்றுவதில் பலவீனம் உள்ளது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய தோற்றத்தின் நோக்கமாவது மனித இயல்பில் ஒரு புரட்சியை உருவாக்கி 1400 ஆண்டுகளாக உள்ளங்களில் ஆதிக்கம் செலுத்தியுள்ள இருளை ஒளியாக மாற்றுவதாகும். இதுவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய தோற்றத்தின் நோக்கமாகும். நமது மூதாதையர்கள் இந்த புரட்சியை தமக்குள் உருவாக்கி இருளிலிருந்து ஒளியின் பக்கம் வந்தனர். ஒரு புரட்சிகரமான மாற்றத்தை தம்மிடத்தில் ஏற்படுத்தினர்.

தமது கொள்கை மற்றும் அமலின் நிலையில் ஒற்றுமையை ஏற்படுத்தினர். ஆனால் அடுத்த தலைமுறையிடம் அந்தத் தகுதி இல்லை. ஆகவே நாம் நம்மை ஆய்வு செய்வது அவசியமாகும். நாம் நமது அமலின் நிலையின் தகுதியை உயர்வாக வைக்க முயற்சி செய்கிறோமா? நமது மூதாதையர்கள் பெற்ற தகுதியைப் பெற முயற்சி செய்கிறோமா? அவர்கள் சஹாபாக்களாக இருந்திருக்கலாம் அல்லது அதற்குப் பிறகு வந்த அஹ்மதிகளாக இருந்திருக்கலாம்.

இங்கு அமெரிக்காவின் அஹ்மதிகளில் பெரும்பான்மையானவர்கள் ஆப்பிரிக்க அமெரிக்கர்களாகவே உள்ளனர். அவர்களின் மூதாதையர்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டபோது பெரும் தியாகங்கள் செய்தனர். பெரும் மாற்றங்களை தம்மிடம் உருவாக்கினர். ஆனால், அதற்கு மேலும் நாம் ஆய்வு செய்ய வேண்டும். அந்த நிலையை இப்போது நிலைநாட்டியுள்ளோமா? நமது அமல் மற்றும் கொள்கைகள் முரண்பாடு இல்லையே? மார்க்கத்திற்கு உலகை விட முன்னுரிமை தருவதற்கான நமது

உறுதிமொழி முழக்கம் எல்லாம் தற்காலிக உணர்வினால் செய்யப்பட்டதல்லவே? என்று பார்ப்பது அவசியமாகும்.

எந்த நிபந்தனையின் மீது நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது ஈமான் கொண்டோமோ அதனை நமது வாழ்வின் அங்கமாக்குவதற்காக செயலளவில் முயற்சி செய்கிறோமா? இல்லையா? என்று ஆய்வு செய்ய வேண்டும். இந்த ஆய்வு தான் நம்மை முன்னேற்றத்தின் பக்கம் எடுத்துச் செல்லக்கூடியதும் நமது கொள்கை மற்றும் செயல் இரண்டையும் ஒன்றையொன்று ஒத்திருக்கும்படியும் செய்யக் கூடியதாகும்.

இப்போது இந்த ஆய்வுகளின் பக்கம் கவனமூட்டுவதற்காக பைஅத் நிபந்தனைகளின் ஒரு முக்கியமான விசயத்தின் பக்கம் கவனமூட்ட விரும்புகிறேன். அது இஸ்லாத்தின் அடிப்படை கடமைகளுள் இரண்டாவது முக்கியமான கடமையாகும். திருக்குர்ஆனிலும் அதுபற்றி மீண்டும் மீண்டும் கவனமூட்டப்பட்டுள்ளது.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களும் இதன் முக்கியத்துவம் குறித்து மீண்டும் மீண்டும் கவனமூட்டியுள்ளார்கள். அந்த முக்கிய விசயம் தொழுகையாகும். பைஅத்தின் மூன்றாவது நிபந்தனையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அல்லாஹ்வுக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதன் பக்கம் கவனமூட்டி அதில் முதலாவதாக இந்த அடிப்படைக் கடமையைப் பற்றி குறிப்பிடுவதாவது எனது பைஅத்தில் வருபவர்கள் ஓர் உறுதி எடுங்கள். இறைவன் மற்றும் ரஸூலின் இறை கட்டளைக்கேற்ப ஐவேளை தொழுகையை எந்தத் தொய்வுமின்றி நிறைவேற்றுவேன் என்று உறுதி எடுங்கள். இங்கு தொழுகையை நிறைவேற்றுவேன் என்று உறுதி எடுங்கள் என்று மட்டும் அன்னார் கூறவில்லை. மாறாக, ஐவேளை தொழுகையை இறைவன் மற்றும் ரஸூலின் கட்டளைக்கேற்ப இருக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறார்கள். அதனை நிறைவேற்றுவது அல்லாஹ் மற்றும் அவனது ரஸூல் (ஸல்) அவர்களின் கட்டளைக்கேற்ப அமையவும் வேண்டும். தொழுகையைப் பற்றி இறைவனது கட்டளை என்ன?

கூறுகின்றார்கள்: வஅகீமுஸ்ஸலாத் – தொழுகையை நிலைநாட்டுங்கள. தொழுகையை நிலைநாட்டுவதற்கான கட்டளை திருக்குர்ஆனில் பல்வேறு இடங்களில் உள்ளது. இன்னும் கூறுவதாயின், சூரா பக்கராவின் ஆரம்ப வசனங்களிலேயே மறைவானவற்றை ஈமான் கொள்வதற்குப் பிறகு இது கூறப்பட்டுள்ளது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

தொழுகையை நிலைநாட்டாமல் மனிதன் இறைவனின் நெருக்கத்தைப் பெறவே முடியாது.

இக்காலத்தில் தொழுகையை நிலைநாட்டுவதன் அவசியம் இன்னும் அதிகமாகி உள்ளது. அல்லாஹ் கிலாஃபத் வாக்குறுதியுடன் இதன் பக்கமும் கவனமூட்டியுள்ளான். தொழுகையை நிலைநாட்டுவதன் பக்கம் கவனமுள்ளவர்களுடனேயே கிலாஃபத் வாக்குறுதியும் தொடர்புடையதாக உள்ளது. தொழுகையை நிலைநாட்டுவது என்றால் என்ன? தொழுகையை ஜமாஅத்துடன் தொழுதல்; முறைப்படி தொழுதல்; குறித்த நேரத்தில் தொழுதல் என்பதாகும்.

அல்லாஹ் கூறுகின்றான்: வஅகீமுஸ்ஸலாத்த வஆத்துஸ்ஸக்காத்த வர்கவூ மஅர்ராகிஈன் – தொழுகையை நிலைநாட்டுங்கள். ஸக்காத்தைக் கொடுங்கள். ருகூ செய்பவர்களுடன் சேர்ந்து ருகூ செய்யுங்கள்.

அதாவது, இறை சன்னிதானத்தில் ஒன்றுசேர்ந்து குனிபவர்களுடன் சேர்ந்து குனியுங்கள். ஆகவே, தொழுபவர்கள், பொருள் தியாகம் செய்பவர்களின் சிறப்புத் தன்மையை விளக்குகிறான்.

கூறுகின்றான்: இந்த சிறப்பு அவர்களிடம் இருக்க வேண்டும். அவர்கள் தம்மிடம் ஒரு ஜமாஅத்தின் வடிவம் கொண்டிருப்பர். அவர்களுக்கு கட்டளையும் அதுவே ஆகும். ஜமாஅத் ஆக உருவாகி இபாதத் செய்யுங்கள். ஜமாஅத் ரீதியாக பொருள் தியாகம் செய்யுமாறும் கூறப்பட்டுள்ளது. அதற்கான காரணமும்

கூறப்பட்டுள்ளது. இப்பணி, இக்கட்டளை ஒரு ஜமாஅத் ஆக ஒன்றுசேர்வதன் மூலம் நடைபெறும் போது அதனால் பரக்கத் ஏற்படும். ஜமாஅத்துடன் தொழுவதில் ஏற்படும் பரக்கத் பற்றி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஜமாஅத்துடன் தொழுபவருக்கு 27 மடங்கு நன்மை கிடைக்கிறது. இதனை நாம் தர்ஸ்களில் கேட்கிறோம்; சொற்பொழிவுகளில் கேட்கிறோம். குழந்தைகளிடம் கூட அது பற்றி பேசுவதற்கு தயார் செய்கிறோம். ஆனால் இதனை அமல் செய்வதற்குரிய வேளை வரும்போது மக்கள் இதன் பக்கம் முழு கவனம் செலுத்துவதில்லை. கட்டாய சூழல் இருந்தாலேயொழிய தொழுகையை ஜமாஅத் ஆகவே தொழ வேண்டும்.

ஆனால் நான் ஏற்கனவே கூறியது போன்று நாம் ஆய்வு செய்தால் தெரிய வரும். தொழுகையை ஜமாஅத் ஆக தொழுவதற்கு எவ்வளவு கவனம் இருக்க வேண்டுமோ அவ்வளவு கவனம் இல்லை. அல்லாஹ்வின் அருளால் அமெரிக்காவின் அஹ்மதிகளுக்கு பள்ளிவாயில்களைக் கட்டுவதன் பக்கம் பெரும் கவனம் ஏற்பட்டுள்ளது. ஆனால் பள்ளிவாயில் கட்டுவதன் பயன், அதன் கடமையையும் நிறைவேற்றும்போது தான் முடிவடையும். மஸ்ஜிதிற்குரிய கடமை அதனை நிரப்புதல் ஆகும். மஸ்ஜிதை நிரப்புவதற்கு இறைவன் வைத்துள்ள அளவுகோளாவது, ஐவேளைகள் பள்ளிவாயிலுக்கு வந்து தொழுவதாகும். உங்களில் பலருக்கு வேலை நேரத்தில் பள்ளிக்கு வந்து தொழுவது சிரமம் தான் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் ஃபஜ்ர், மக்ரிப் மற்றும் இஷா தொழுகைகளில் அந்தக் காரணத்தைக் கூற முடியாது. அந்த நேரங்களில் பள்ளிவாயிலுக்கு வர முடியும்.

நான் அறிவேன். அஹ்மதிய்ய உலகில் பலர் இருக்கின்றனர். அவர்கள் இந்த மேற்கத்திய நாடுகளில் வசிக்கவும் செய்கின்றனர். 15-20 மைல்கள் மஸ்ஜிதை விட்டு தூரத்தில் வசிக்கின்றனர். ஆனாலும் தொழுகைக்காக அவர்கள் பள்ளிவாயிலுக்கு வருகின்றனர். ளுஹர், அஸர் தொழுகையை வந்து தொழ முடியாவிட்டாலும் நான் கூறியது போன்று ஃபஜ்ர், மக்ரிப் மற்றும் இஷா தொழுகைகளில் எப்படியாவது பள்ளிவாயிலில் வந்து கலந்து கொள்வதற்கு முயற்சி செய்கின்றனர். இங்கு கிட்டத்தட்ட எல்லாரிடமும் வாகனம் உள்ளது. தமது உலக வேலைகளுக்காக அதனை பயன்படுத்துகின்றனர். ஆனால் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக அவனை இபாதத் செய்வதற்காக இந்த வாகனங்களைப் பயன்படுத்தினால் இந்த வாகனங்களின் நோக்கம் மார்க்கத் தொண்டாகி விடும். உங்களுக்கும் மார்க்கம் உலகம் இரண்டும் கிடைக்கும். கட்டாய சூழல் உள்ள இடங்களில் அருகிலுள்ள அஹ்மதி வீடுகளில் ஜமாஅத் ஆக தொழலாம். அதற்கான ஏற்பாடு செய்யலாம். தன்னந்தனியாக உள்ள வீடாக இருந்தால் வீட்டிலுள்ளவர்கள் மனைவி மக்களோடு சேர்ந்து ஜமாஅத்துடன் தொழுகையை நிறைவேற்ற முயற்சி செய்ய வேண்டும். அதன் மூலம் குழந்தைகளிடமும் தொழுகையை ஜமாஅத்துடன் தொழுவதற்கான பழக்கம் ஏற்படும். குழந்தைகளை ஃபஜ்ர் தொழுகைக்காக எழுப்பினால் தொழுகையின் முக்கியத்துவம் அவர்களுக்கு தெரிய வரும். அதே வேளையில் வீணான பல விசயங்களிலிருந்து அவர்கள் விலகவும் செய்வர். இரவில் வெகுநேரம் வரை இம்மக்களுக்கு டி.வி. பார்ப்பதிலும், இன்டர்நெட்டில் உட்காருவதிலும் ஆர்வம் உள்ளது. குறிப்பாக வாரத்தின் இறுதி நாட்களில் தொழுகைக்காக விழிக்கும் பழக்கம் ஏற்படும்போது இரவில் நேரத்துடன் உறங்கும் பழக்கம் ஏற்படும்.

குறிப்பாக வாலிப வயதில் நுழையும் சிறுவர்கள் சுபுஹ் தொழுகைக்காக எழுவதால் உலக வேலைகளை முறைப்படுத்தி செய்வதில் கவனம் ஏற்படும். சில நிர்பந்தங்கள் உள்ளன. பார்க்கத்தக்க நல்ல விசயங்கள் உள்ளன. அவற்றிலிருந்து நான் தடுக்கவில்லை. சுபுஹ் தொழுகைக்கு எழுகின்ற பழக்கமுடைய சிறுவர்களின் செயல்களில் நடுநிலை இருக்கும். எல்லாவற்றிலும் ஒரு நடுநிலை இருக்க வேண்டும். உலக வேலைகளுக்கு மதிப்பளித்து அதற்கு தொழுகையை விலையாகக் கொடுப்பது மாபெரும் முட்டாள்தனமாகும்.

பிறகு விடுமுறை நாட்களில் சிலருக்கு குடும்பத்துடன் சில புரோகிராம்கள் உள்ளன. விடுமுறை நாட்களில் குடும்பத்துடன் வெளியில் செல்வது என்பது வேறு விசயம். அவ்வாறு புரோகிராம் இல்லாத போது பள்ளிவாயிலுக்கு தொழுகைக்காக வர வேண்டும். பிள்ளைகளையும் அழைத்து வர வேண்டும். பலர், பிள்ளைகளுக்கு பள்ளிவாயிலுக்கு வரும் பழக்கம் இல்லை என்று கூறுகின்றனர். சில குழந்தைகள் கெட்டு விடுகின்றனர். பள்ளிவாயிலுக்கு வருவதுதான் அதற்கான சிகிச்சை ஆகும். குழந்தைகளாக இருக்கும் போது இறைவனின் கடமையை நிறைவேற்றும் பழக்கத்தை அவர்களிடம் ஏற்படுத்துங்கள். அந்தக் கடமை தொழுகை மூலமே நிறைவேற முடியும்.

தொழுகை ஓர் அடிப்படை விசயம் என்ற உணர்வு சிறு வயதிலேயே ஏற்பட்டு விட்டால், அதுவன்றி முஸ்லிம் முஸ்லிமாகவே முடியாது என்ற உணர்வு ஏற்பட்டு விட்டால் வாலிப வயதிலேயே இப்பழக்கம் உறுதியாகி விடும். பையன் தடுமாறிப் போகின்றான் என்ற முறையீடும் பிறகு வராது. சுற்றுலாவுக்காக எங்காவது சென்றாலும் சரி அங்கும் கூட இறை திருப்தியைப் பெரும் பொருட்டு ஜமாஅத்துடன் தொழுகையை நிறைவேற்றுங்கள். எனது அனுபவமும் இதில் உண்டு. பலருக்கு இந்த அனுபவம் இருப்பதாகக் கூறியுள்ளனர். சுற்றுலா செல்லும் இடத்தில் கணவன் – மனைவி, குழந்தைகள் தொழுகை நேரத்தில் ஜமாஅத்தாக தொழுதால் சுற்றி இருப்பவர்களிடமும் ஓர் ஆர்வம் ஏற்படுகிறது. அவர்களும் பார்க்கின்றனர். அதனால் தப்லீகின் வழி திறக்கிறது.

பொதுவாக, சாதாரண உலகியல் வாதியின் கற்பனையின்படி முஸ்லிம்களில் தீவிரவாத சிந்தனைகள் உள்ளவர்கள்தான் தொழுகின்றனர் என்பதாகும். ஆனால் சுற்றுலாவுக்கு வருகிறவர்களில் முதியவர்களும், இளைஞர்களும், பெண்களும் தொழுகிறார்கள் என்பதை அம்மக்கள் பார்க்கும் போது, ஆடைகள் கூட அவர்களைப் போன்ற மக்கள் அணிகிற ஆடைகளை அணிந்துள்ளனர். இருப்பினும் அவர்களின் தொழுகையில் ஒரு தனிச்சிறப்பும் கண்ணியமும் இருக்கிறது. அதனால் மக்களின் கவனம் கண்டிப்பாக திரும்புகிறது. தமது சுற்றுலா அனுபவங்களை பலர் சொல்வதாக கூறினேன். அவர்களுள் பலர் தொழுகையின் காரணத்தால் எவ்வாறு மற்றவர்களின் கவனம் திரும்பியது. தப்லீகின் வழி திறந்துள்ளது என்றும் கூறியுள்ளார்கள். எனவே, பெரியவர்களும் சரி சிறியவர்களும் சரி நாம் தாழ்வு மனப்பான்மை கொள்ளத் தேவையில்லை.

உலகில் மார்க்க ஆன்மீகப் புரட்சியை நாம் தான் ஏற்படுத்துவோம் என்பது நமது வாதமாகும். மார்க்க ஆன்மீகப் புரட்சியை ஏற்படுத்துவதற்கு எல்லா வகையான தாழ்வு மனப்பான்மையையும் விட்டு விடுதலை பெற வேண்டும். தமக்குள் முதலில் மார்க்க ஆன்மீகப் புரட்சியை ஏற்படுத்த வேண்டும். இந்த மார்க்க ஆன்மீகப் புரட்சி இபாதத்தின் கடமையை நிறைவேற்றாமல் ஏற்படவே முடியாது. இபாதத்தின் கடமையை நிறைவேற்ற எல்லாவற்றிலும் முதன்மையான விசயம் தொழுகையாகும்.

எனவே உங்கள் தொழுகைகளைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்: ஹாஃபிளூ அலஸ்ஸலவாத்தி வ ஸலாத்துல் வுஸ்தா – உங்கள் தொழுகைகளைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். ஹஃபள் என்றால் ஒழுங்கு முறையை மேற்கொள்ளுதல், பிறகு அதனை கண்காணித்து வருதல் என்பதாகும். பிறகு, ஒவ்வொரு நடுத் தொழுகைகளைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள் என்று கூறுகின்றான். அதாவது எந்தத் தொழுகை உங்களது பணிகளுக்கு மத்தியில் வருகிறதோ அந்தத் தொழுகைகளைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். உலக வேலைகளின் காரணத்தால் எந்த தொழுகைகளைத் தொழ முடியவில்லையோ அதனை எவ்வாறிருப்பினும் சிறப்பான கவனத்துடன் பாதுகாக்க வேண்டும். தொழுகையில் சோம்பேறித்தனம் காட்டுபவர்களை கட்டுப்பட்டவர்களின் பட்டியலிலிருந்து விலக்கி விடுகிறது. எனவே தொழுகையை பேணுவது பற்றி இறைவன் கவனமூட்டுகிறான். குறிப்பாக உங்கள் நஃப்ஸின் சோம்பல் மற்றும் உலக வேலைகளின் காரணத்தால் நிறைவேற்ற முடியாமல் போகிற தொழுகைகளின் பக்கம் கவனமூட்டுகின்றான் அல்லது அதற்குரிய கடமையை முழுமையாக வழங்காமல் நிறைவேற்றப்படுகின்ற தொழுகைகள் பற்றி கவனமூட்டுகின்றான். சிலர் தொழுகின்றார்கள்தான். விரைவாக தொழுகின்றார்கள். அது தொழுகையின் கடமையை நிறைவேற்றுதல் அன்று.

அதற்கு அடுத்து இறைவன் கூறுகின்றான்: வகூமு லில்லாஹி கானிதீன். அல்லாஹ்வுக்கு கட்டுப்பட்டவர்களாக நில்லுங்கள். அதாவது முழு கவனமும் தொழுகையில் இருக்க வேண்டும். பிறகு உலக சிந்தனைகள், ஆசைகள் மனதை ஆக்கிரமிக்க வேண்டாம். நாம் ஓர் இறைவன் முன் நிற்கின்றோம். அவனது கட்டளைகளுக்கு முழுமையாகக் கட்டுப்பட வேண்டும் என்ற எண்ணத்தில் நிற்க வேண்டும். இந்த நிலை ஏற்பட்டால் அத்தகைய தொழுகையாளிகளைப் பற்றி இறைவன் கூறுகிறான். அந்தத் தொழுகைகளும் உங்களைப் பாதுகாக்கும். உங்களை கண்காணிக்கும். உங்களைப் பாவங்களிலிருந்து தடுக்கும். உங்கள வீடுகளைப் பரக்கத்தால் நிறைக்கும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நான் எனது ஜமாஅத்திற்கு இதே போதனையைத் தான் செய்கிறேன். அவர்கள் ஆர்வமற்ற, உற்சாகமற்ற தொழுகைகளைத் தொழ வேண்டாம். மாறாக உள்ளத்தை அவன் முன்னால் கொண்டு வர முயலுங்கள். அதன் மூலம் ஆர்வமும் உற்சாகமும் தொழுகையில் கிடைக்க வேண்டும்.

பிறகு அல்லாஹ் கூறுகின்றான்: இன்னஸ் ஸலாத்த தன்ஹா அனில் ஃபஹ்ஷாயி வல் முன்கரி – நிச்சயமாக தொழுகை விரும்பத்தகாத தீய விசயங்களில் இருந்து தடுக்கிறது. எனவே நினைவில் கொள்ள வேண்டும். தொழுகை வீணான தீய காரியங்களிலிருந்து தடுக்கிறது. ஆனால் ஒவ்வொரு தொழுகையும் அல்ல. ஒவ்வொரு தொழுகையாளியையும் அல்ல. ஒவ்வொரு தொழுகையாளியும் தீமையிலிருந்து விலகி விட முடியாது. முழுமையான கட்டுப்படுதலுடன் நிறைவேற்றப்பட்ட தொழுகை தான் தீமைகளிலிருந்து தடுக்கும் அல்லது அவ்வாறு செய்பவரைத்தான் தீமைகளிலிருந்து தடுக்கும். இறைவன் எனது ஒவ்வொரு அசைவையும் அமைதியையும் பார்ப்பவனாவான். அந்த இறைவன் முன்னால் நிற்கிறேன். அவன் எனது ஒவ்வொரு அசைவையும் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்ற சிந்தனையுடன் நிறைவேற்றப்பட்ட தொழுகைதான் – அத்தகைய கட்டப்படுதலுடன் உள்ள தொழுகை தான் அவனைப் பாதுகாக்கிறது; அவனை கண்காணிக்கவும் செய்கிறது. எந்த வீடுகளில் அத்தகைய தொழுகைகள் தொழப்படுமோ அந்த வீடுகளின் தன்மையே வேறு விதமாகி விடுகிறது.

அத்தகைய தொழுகைகளை நாம் தேட வேண்டும். அப்போதுதான் நாம் நமது பைஅத் உடன்படிக்கையை உண்மையான முறையில் நிறைவேற்ற முடியும். அதுவன்றி தொழுகையில் நின்று கொண்டு, கவனத்தை நமது உலகப் பணிகள் மற்றும் விருப்பங்களின் பக்கம் வைத்திருப்பதல்ல. எப்போதாவது தொழுவது; சில வேளைகள் தொழுவதில்லை என்று இருப்பதன்று.

பிறகு நான் மீண்டும் கூறுகிறேன். நம்மில் ஒவ்வொருவரும் தம்மை ஆய்வு செய்வது அவசியமாகும். இந்த நாடுகளில் வாழ்பவர்கள் உலக வேலைகளின் காரணத்தால் தொழுகையின் பக்கம் கவனம் செலுத்துவதில்லை. மற்ற நாடுகளில் வசிப்பவர்களின் நிலையும் இதுவேயாகும். ஆனால் எவ்வாறிருப்பினும், ஓரளவுக்கு பள்ளிவாயிலுக்கு வந்து தொழுபவர்களும் உள்ளனர். இஸ்லாத்தின் இந்த முக்கியமான கடமையின் பக்கம் நாம் மீண்டும் மீண்டும் கவனமூட்டியும், எனக்கு முன்னர் கலீஃபாக்கள் கவனமூட்டியும் வந்துள்ளார்கள். அல்லாஹ் இக்காலத்தில் M.T.A. என்ற அருளை வழங்கியுள்ளான். காலத்தின் கலீஃபாவின் குரல் உலகில் ஒவ்வொரு மூலைக்கும் உடனே சென்று சேர முடியாமல் இருந்தது. இப்போது உடனேயே அந்த சப்தம் – அல்லாஹ் அவனது ரஸூல் உடைய தூதுச் செய்தி எல்லா இடத்திற்கும் சென்று சேர்கிறது.

நம்மில் சிலர் எனது குத்பாக்களையும், சொற்பொழிவுகளையும் கேட்பதில்லை என்றால் அல்லது கேட்டாலும் மனமில்லாமல் கேட்கின்றனர் என்றால், ஒரு காதில் கேட்டு மறு காது வழியாக விட்டு விடுகின்றனர் என்றால் அவர்கள் இந்த பைஅத் உடன்படிக்கையை நிறைவேற்றியவர்கள் அல்லர். மார்க்கத்திற்கு உலகை விட முன்னுரிமை தருவோம், தாங்கள் எடுக்கின்ற நல்ல தீர்மானங்களுக்கு முழுமையாகக் கட்டுப்படுவேன் என்ற அந்த உடன்படிக்கையை நிறைவேற்றவில்லை என்றால், இது கட்டுப்படுதலிலிருந்து வெளியேறும் செயலாகும். ஒரு காதில் கேட்டு மறு காதில் விடுவது என்பது முழுமையான கட்டுப்படுதலிலிருந்து தூரத்திற்கு எடுத்துச் செல்லும் அமலாகும். அத்தகைய மக்களை இறைவன் கடுமையாக எச்சரித்துள்ளான்.

கூறுகிறான்: ஃபவைலுல் லில் முஸல்லீன். அல்லஸீனஹும் அன் ஸலாத்திஹிம் ஸாஹூன் – அத்தகைய தொழுகையாளிகளுக்கு அழிவுதான். அவர்கள் தொழுகையில் இருந்து கவனமற்று உள்ளனர். தொழுகையை ஜமாஅத்துடன் தொழாமல் இருப்பது, முறையாக தொழாமல் இருப்பது, முழுக் கவனத்துடன் தொழுவதற்கு முயற்சி செய்யாமல் இருப்பது ஆகியவையும் கவனமின்மையாகும். தொழுகையில் கவனம் நிலைநிற்க பல வேளைகளில் முயற்சி செய்யப்படுவதில்லை. மீண்டும் மீண்டும் கவனத்தை தொழுகையில் கொண்டு வருவது அவசியமாகும். தொழுகையை நிலைநாட்டுதல் என்பதற்கு இதுவும் ஒரு பொருளாகும். ஆகவே மிகவும் பயப்பட வேண்டிய இடமாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இதன் பக்கம் நம்மை கவனமூட்டியவாறு கூறுகின்றார்கள்:**

ஒரு மனிதர் என்னை நம்பவில்லையெனில் அவர் நிச்சயமாக பாவி ஆவார். ஆனால் என்னை நம்புபவர் பைஅத் உடன்படிக்கையும் செய்து விட்டு பிறகும் அதனை அமல்படுத்துவதில்லையெனில் அதிகமாக கேள்வி கேட்கப்படுவார். எனவே ஒவ்வொரு அஹ்மதி மீதும் பெரும் பொறுப்பு உள்ளது. இந்த பொறுப்பு நான் இறைவனை சாட்சியாக்கி ஒரு பைஅத் உடன்படிக்கை செய்துள்ளேன். அதனை நிறைவேற்றா விட்டால் இறைவனிடம் அடுத்து பதில் சொல்ல வேண்டியிருக்கும் என்ற எண்ணம் இருந்தால் மட்டுமே அப்பொறுப்பு நிறைவேறும். இல்லையென்றால் நிறைவேறாது. பெரியவர்களும் தமது பொறுப்பை உணர வேண்டும். சிறுவர்களும் தமது பொறுப்பை உணர வேண்டும். ஆண்களும் பெண்களும் உணர வேண்டும். இங்கு பெரும்பாலான வீடுகளின் அமைதியற்ற நிலைக்குரிய காரணம் இறைவணக்கத்தின் பக்கம் கவனம் இல்லை. எவ்வளவு கவனம் இருக்க வேண்டுமோ அவ்வளவு கவனம் இல்லை.

சிலர் என்னிடம் சந்திக்க வரும்போது துஆ செய்யுமாறு கூறுகின்றனர். நான் பொதுவாக அவர்களிடம் நீங்களும் துஆ செய்யுங்கள். தொழுகைகளில் கவனம் செலுத்துங்கள் என்று கூறுவேன். முறையாக தொழுகின்றீர்களா என்று கேட்டால் சிலரது பதில் எதிர்மறையாகவே உள்ளது. அத்தகையவர்களிடம் பொதுவாக நான் கூறுவது உண்டு. நீங்கள் மார்க்கத்தோடு விளையாடாதீர்கள். மார்க்கத்தை விளையாட்டாகக் கருதாதீர்கள். நீங்கள் சுயமாக தொழுவதிலும் துஆவிலும் பழக்கம் இல்லாதவர்களாக உள்ளீர்கள். கவனமில்லாமல் இருக்கிறீர்கள். பிரச்சனைகள், உலக விவகாரங்களுக்காக என்னிடம் துஆ செய்ய சொல்கிறீர்கள். முதலில் நீங்கள் அல்லாஹ்விடம் கவனம் செலுத்துங்கள். பிறகு என்னிடம் சொல்லுங்கள். நீங்கள் உங்களது நிலைமைகளில் மாற்றத்தை ஏற்படுத்தாமல், மாற்றம் ஏற்படுத்த முயலாமல் இருந்தால் மற்றவரது துஆவும் உங்களிடம் எந்த விளைவையும் ஏற்படுத்தாது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஜமாஅத்தை நிலைநாட்ட வந்த போது அது இறைவனுடன் தொடர்பை ஏற்படுத்துபவர்களின் ஜமாஅத்தாக அது இருந்தது. அவர்கள் தமது இபாதத்துகளைப் பாதுகாப்பவர்களாக இருந்தனர். எனவே அன்னார் கூறினார்கள்: நான் பீர்களை வணங்குவதை முடிவுக்கு கொண்டு வரவே வந்துள்ளேன். மேலும் கூறினர்கள்: நீங்கள் பீர் ஆகுங்கள். பீர் வணங்கிகளாக ஆகாதீர்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தம்மை ஏற்றுக் கொண்டிருப்பவர்களை எத்தகைய பீராக ஆக வேண்டும் என்று விரும்பினார்களோ அது இக்காலத்தின் உலக வணங்கி பீர்களைப் போன்றவர்கள் அல்ல. அவர்கள் கையில் தஸ்பீஹ் வைத்துக் கொண்டு அமர்ந்து விடுகின்றனர. நமது இபாதத் மற்றும் பிற கடமைகள் எல்லாம் நிறைவேற்றப்பட்டு விட்டன. இனி நாம் தொழ வேண்டிய தேவையும் இல்லை. வேறு இபாதத் செய்ய வேண்டிய தேவையும் இல்லை என்று கருதுகின்றனர். தொழுகைகளை விட்டு மைல் கணக்கில் விலகியுள்ளனர். தாமும் தொழுவதில்லை – தமது சீடர்களையும் தொழத் தேவையில்லை என்று கூறுகின்றனர். பலர் அவ்வாறே உள்ளனர். அத்தகைய பீர், ஸெய்யிது ஆகியோர் ஹிதாயத்தின் பக்கம் அழைத்துச் செல்பவர்கள் அல்ல. மாறாக வழிகேட்டின் பக்கம் அழைத்துச் செல்பவர்கள் ஆவர்.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களை சான்று காட்டி ஒரு சம்பவம் கூறியுள்ளார்கள்:

ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களது ஒரு சகோதரி இருந்தார். அவர் ஏதோ ஒரு பீர் சாஹிபின் முரீது ஆக இருந்தார். அந்த பீர் அந்த சகோதரியின் மூளையில், நமது சீடர்கள் எந்தத் தொழுகையும் தொழத் தேவையில்லை என்று பதிய வைத்திருந்தார். எனது சீடராக இருந்து நான் கூறுகின்ற சில காரியங்களை மட்டும் செய்து வாருங்கள். அதுவே போதுமானது. அதனால் நீங்கள் மன்னிக்கப்பட்டு விடுவீர்கள் என்று கூறினார்.

முதலாவது கலீஃபா அவர்கள் அந்த சகோதரியிடம் ஒருநாள் கூறினார்கள். உமது பீர் சாஹிபிடம் கேளும். கணக்குப் பார்க்கும் நாளன்று அல்லாஹ் நன்மைகள் இபாதத்துகள் பற்றி கேட்டால் என்ன பதில் சொல்வது? மலக்குகள் ஜன்னத்தின் வழியைத் தடுத்து எனது நன்மைகளைப் பற்றி கேட்டால் நான் என்ன பதில் சொல்ல வேண்டும்? சகோதரி இந்தக் கேள்வியை அந்த பீர் சாஹிபிடம் கேட்ட போது பீர் சாஹிப் கூறினார். மலக்கு உனது வழியைத் தடுத்தால், நான் இந்த பீர், இந்த ஸெய்யிதுடைய மகனை ஏற்றிருப்பவனாவேன் என்று சொல். அவர் (மலக்கு) உனது வழியை சரியாக்கித் தருவார். பிறகு என்னிடம் (பீர் சாஹிபிடம்) வந்து மலக்கு கேட்டால் நான் கூறுவேன். கர்பலா மைதானத்தில் எனது முன்னோர்கள் செய்த தியாகங்கள் உமக்கு மறந்து விட்டதா? ரஸுலின் பேரரின் சந்ததியிலிருந்து நான் வந்துள்ளேன். அவர்கள் செய்த தியாகங்களை மறந்து விட்டீர்களா? மலக்குகள் இந்தக் கேள்வியைக் கேட்டு வெட்கப்பட்டு வழியை விட்டு விடுவர். இதுவே இம்மக்களது பீர்களின் நிலையாகும். நான் பெருமையுடன் சொர்க்கத்திற்குப் போய் விடுவேன் என்றார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றவர்களாகிய நாம் இத்தகைய பீர் ஆகக் கூடாது. நாம் நமக்குள் ஒரு புரட்சியை ஏற்படுத்த வேண்டும். நமது நிலைகளில் அது ஏற்பட வேண்டும். நமது பிள்ளைகள் சந்ததிகளிடமும் அந்தப் புரட்சி ஏற்பட வேண்டும். இந்த சமுதாயத்தில் ஆன்மீக மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். எனவே எப்போதும் நினைவில் கொள்ளுங்கள்! நமது கொள்கை மட்டுமே நம்மை காப்பாற்றாது. நமது கொள்கை மட்டுமே நம்மிடம் புரட்சிகர மாற்றத்தை நம்மிடம் கொண்டு வராது. மாறாக நமது அமல்தான் நம்மிடம் புரட்சியைக் கொண்டு வரும். எல்லாவற்றிற்கும் முதலில் நமது துஆக்கள் அல்லாஹ் அதனை கபூல் செய்யும் போது உலகில் ஒரு புரட்சி ஏற்படும். துஆ செய்வதற்கு மிகச் சிறந்த வழி தொழுகையாகும்.

எனவே நமது தொழுகைகளைப் பாதுகாப்பது ஒவ்வொரு அஹ்மதியின் கடமையாகும். ஒன்றுபட்ட நிலையில் எல்லா அஹ்மதிகளின் துஆவும் ஒரே திசையில் செல்லும் போது அந்த துஆக்கள் ஒன்றுசேர்ந்து ஒரு புரட்சியைக் கொண்டுவரக் காரணமாகும். ஆகவே கிலாஃபத்தின் கரத்தை உறுதிப்படுத்த ஒவ்வொரு அஹ்மதியும் தமது தொழுகைகளின் பக்கம் கவனம் செலுத்துவது கடமையாகும். ஏனெனில் அந்தப் புரட்சி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் தொடர்புடையதாகும். இதன் விளைவால் உலகில் பெரும்பாலார் ஹஸ்ரத் முஹம்மது ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய கொடியின் கீழ் ஒன்றுதிரள வேண்டியுள்ளது. அது துஆவின் மூலமே நடைமுறைக்கு வரவேண்டியதுள்ளது. அது நடைமுறைக்கு வரும். எனவே ஒவ்வொரு அஹ்மதியும் நினைவில் கொள்ளட்டும். அவர் தமது தொழுகைகளை பாதுகாத்து தமது பிள்ளைகளின் தொழுகைகளின் பாதுகாப்பின் பக்கமும் கவனம் செலுத்தட்டும். அதன் மூலம் நாம் விரைவாக எல்லா உலகத்தின் மீதும் ஹஸ்ரத் முஹம்மது ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களது கொடி பறப்பதைப் பார்க்க வேண்டும். அல்லாஹ்வின் கருணையை நாமும் நமது சந்ததிகளும் ஈர்ப்பவர்களாக ஆக வேண்டும். அல்லாஹ்வின் கருணை கூட அல்லாஹ்வின் கடமையை நிறைவேற்றி தொழுபவர்களுக்கு தான் இறைவன் வாக்களித்துள்ளான். அவர்களுக்கே கிடைக்கும்.

அல்லாஹ் கூறுகின்றான்: வஅகீமுஸ்ஸலாத்த வஆத்துஸ்ஸக்காத்த வஅதிவுர் ரஸுல லஅல்ல(க்)கும் துர்ஹமூன் – தொழுகையை நிலைநாட்டுங்கள். ஸக்காத் கொடுங்கள். ரஸுலுக்கு கட்டுப்படுங்கள். அதன் மூலம் உங்கள் மீது கருணை காட்டப்படும். ஆகவே அல்லாஹ்வின் கருணையைப் பெறுபவராக நாம் ஆக வேண்டும் எனில், நமது தொழுகைகளைப் பாதுகாத்து அதனை நிலைநாட்ட முயற்சியும் செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீண்டும் மீண்டும் பல்வேறு வகையில் தம்மை ஏற்றுக் கொண்டவர்களை தொழுகையின் பக்கம் கவனமூட்டியுள்ளார்கள். அதன் மூலம் நாம் பைஅத்தின் கடமையை நிறைவேற்றுபவர்கள் ஆவதற்காக – இறை நெருக்கம் பெறுபவர்களாக ஆவதற்காக கவனமூட்டியுள்ளார்கள். நாம் அல்லாஹ்வின் கருணையிலிருந்து பங்கு பெற்று உலகம் மற்றும் மறுமை இரண்டையும் பெறுபவர்களாக ஆவதற்காக இதனைக் கூறியுள்ளார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: தம்மை எனது ஜமாஅத்தல் இணைத்துக் கொண்டுள்ள மக்களே! நீங்கள் முழுக்க முழுக்க தக்வாவின் வழிகளில் அடி எடுத்து வைத்தால் தான் எனது ஜமாஅத்தைச் சார்ந்தவர்களாக வானத்தில் சேர்க்கப்படுவீர்கள். எனவே உங்கள் ஐவேளை தொழுகைகளை இறையச்சத்துடன் நிறைவேற்றுங்கள். இறைவனை நீங்கள் பார்ப்பது போன்று நிறைவேற்றுங்கள்.

மேலும் கூறுகின்றார்கள்: நிச்சயமாக நினைவில் கொள்ளுங்கள்! எந்த அமலும் தக்வாவை விட்டு வெறுமையாக இருக்கும் பட்சத்தில் இறைவனை சென்றடைய முடியாது. ஒவ்வொரு நன்மையின் வேரும் தக்வா ஆகும். எந்த அமலில் இந்த வேர் அழியவில்லையோ அந்த அமலும் வீணாகாது.

மேலும் கூறுகின்றார்கள்: தொழுகை என்பது என்ன? அது துஆவாகும். அது தஸ்பீஹ், தஹ்மீது, தக்பீர், இஸ்திக்ஃபார், தரூது ஆகியவற்றுடன் உருகி கேட்கப்படுவதாகும். எனவே நீங்கள் தொழும் போது கவனமற்றவர்களைப் போன்று அரபி வாசகங்களை மட்டும் உங்கள் துஆக்களில் பேணி வருபவராக இருக்கக் கூடாது. ஏனெனில் அவர்களின் துஆ, இஸ்திக்ஃபார் அனைத்தும் வெறும் சடங்காகும். அதில் எந்த உண்மையும் இல்லை. ஆனால் நீங்கள் தொழுதால் இறை வார்த்தையாகிய குர்ஆன் மற்றும் ரஸுலின் வார்த்தையாகிய சில வார்த்தைகளைத் தவிர மற்ற எல்லா துஆக்களையும் உங்கள் மொழிகளிலேயே உருக்கத்துடன் கேளுங்கள். அதன் மூலம் உங்கள் உள்ளத்தில் எளிமையும், அருளின் தாக்கம் ஏற்படும்.

இத்தகைய தரத்தை நாம் தொழுகையில் பெற முயற்சி செய்ய வேண்டும். இந்த பணிவு நம்மிடம் இறைவனில் ரஹ்மத்தை ஈர்த்துக் கொண்டு வரும். அல்லாஹ்வின் அருளை பெறுபவராக்கும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மிடம் பார்க்க விரும்புகிற தொழுகைகள் இத்தகையவையாகும்.

ஓரிடத்தில் அன்னார் கூறுகின்றார்கள்: தொழுகை எத்தகையது எனில் அதன் மூலமாக வானம் மனிதனிடம் குனிகிறது. அதாவது இறைவன் துஆ ஒப்புக் கொள்ளப்படும் காட்சியைக் காட்டுகிறான்.

கூறுகிறார்கள்: தொழுகையின் கடமையை நிறைவேற்றுபவர் தான் மரணித்து விட்டதாக தனது ரூஹ் இறை சன்னிதானத்தில் வீழ்ந்து விட்டதாக எண்ணுகிறான். எந்த வீட்டில் இத்தகைய தொழுகைகள் தொழப்படுமோ அவ்வீடு ஒருபோதும் அழியாது. ஹதீஸில் வருகிறது: நூஹ் உடைய காலத்தில் தொழுகை இருந்தால் அந்த சமுதாயம் அழிந்திருக்காது.

கூறுகின்றார்கள்: ஹஜ் கூட மனிதனுக்கு நிபந்தனைக்கு உட்பட்டதேயாகும். நோன்பும் நிபந்தனைக்கு உட்பட்டதாகும். ஸக்காத்தும் நிபந்தனைக்கு உட்பட்டதாகும். ஆனால் தொழுகை நிபந்தனைக்கு உட்பட்டதல்ல. மற்ற அனைத்து விசயங்களுக்கும் சில நிபந்தனைகள் நிறைவேறினால்தான் அவற்றை நிறைவேற்ற வேண்டியிருக்கும். அதுவன்றி வேண்டாம். கடமையில்லை. ஆனால் தொழுகை எல்லா நிலையிலும் கண்டிப்பானது. மனிதன் பயணத்தில் இருந்தாலும், நோயாளியாக இருந்தாலும் எந்நிலையில் இருந்தாலும் அவர் சுகமில்லாமல் இருந்தாலும் தொழுவது கடமையாகும்.

கூறுகிறார்கள்: அனைத்தும் ஒரு வருடத்திற்கு ஒருமுறை தான். ஆனால் தொழுகைக்கான கட்டளையாவது ஒவ்வொருநாளும் ஐந்து முறையாகும். எனவே முழுக்க முழுக்க தொழுகையை நிறைவேற்றாதவரை அதன் மூலம் கிடைக்கின்ற பரக்கத்துகள் கிடைக்க முடியாது. பைஅத்தினால் எந்தப் பயனும் கிடைக்காது. எனவே தொழுகை நிறைவேற்றுதல் தொழுகையைப் பாதுகாத்தல் ஆகிய இறை வழிகாட்டலுக்குரிய சில விளக்கங்களை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு விளக்கியுள்ளார்கள். இதனை அன்னார் ஒவ்வொரு அஹ்மதியிடமும் எதிர்பார்க்கிறார்கள். அதனால்தான், அதுவன்றி பைஅத் செய்வதனால் எந்தப் பயனும் இல்லை என்று அன்னார் கூறினார்கள்.

நான் ஏற்கனவே கூறியது போன்று இதன் முக்கியத்துவத்தை ஒவ்வொரு அஹ்மதியும் முன் நிறுத்த வேண்டும். அதன் மூலம் நாம் நமது அமல் மூலம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது பைஅத்தில் வந்து, நம்மிடம் இறைவனிடமிருந்து கொண்டு வந்த தூய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்று உலகிற்கு கூறுங்கள்.

புதிதாக பைஅத் செய்தவர்கள் பெரும்பாலாரைப் பார்க்கிறேன். அவர்களிடம் இறைவன் பெரும் புரட்சியை ஏற்படுத்தியுள்ளான். தொழுகையின் காரணத்தால் ஏற்படுத்தியுள்ளான். ஒவ்வொரு அஹ்மதிக்கும் குறிப்பாக பழைய அஹ்மதிகளின் சந்ததிகள் நினைவில் கொள்ள வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: தொழுகையில் ஆர்வம் இறைவனது அருளினாலேயே கிடைக்கிறது. முதலில் இந்த துஆவைக் கேளுங்கள். அல்லாஹ்வே! என்னிடம் நெருக்கத்தின் நிலையை ஏற்படுத்துவாயாக! அன்னார் நமக்கு ஒரு துஆவைக் கற்றுத் தருகிறார்கள். நீங்கள் இவ்வாறு துஆ செய்யுங்கள. அல்லாஹ்வே! நீ என்னைப் பார்க்கிறாய். நான் எத்தகைய குருடனாக பார்வையற்றவனாக உள்ளேன். நான் இப்போது முற்றிலும் மரணித்த நிலையில் உள்ளேன். சிறிது நேரத்திற்குப் பிறகு உனது அழைப்பு வரும். நான் உன்னிடம் வந்து விடுவேன் என்று எனக்கு தெரியும். அதாவது நான் இவ்வுலகத்தை விட்டு செல்வதற்காக உனது அழைப்பு வரும். அப்போது என்னை எவராலும் தடுக்க முடியாது. ஆனால் எனது உள்ளம் குருடாக அறிய முடியாததாக உள்ளது. அதன் மீது ஓர் ஒளிப் பிழம்பை இறக்குவாயாக! அதன் மூலம் உனது அன்பு, உன்மீது ஆர்வம் உருவாக வேண்டும். நான் குருடனாக எழாதவாறு என் மீது அருள் செய்வாயாக! குருடர்களில் சேர்ந்து விடக் கூடாது.

கூறுகின்றார்கள்: இத்தகைய துஆவைக் கேட்டால் இத்தகைய துஆவை தொடர்ந்து செய்தால் ஒரு காலம் அவர் மீது வருவதைப் பார்ப்பார். தொழுகையின் மீது ஒரு ரசனை தரத்தக்க ஒன்று வானத்திலிருந்து இறங்கும். அல்லாஹ் நம் அனைவருக்கும் அத்தகைய தொழுகையை வழங்குவானாக!

ஜுமுஆவிற்குப் பிறகு நான் இரு ஜனாஸா காயிப் தொழுவேன். ஒன்று, நமது கொள்கைப்பரப்புனர் இந்தோனேசியாவைச் சேர்ந்த அமர் மஃரூப் அஸீஸ் ஆவார். 16 ஜுன் அன்று இறை நியதிக்கேற்ப வஃபாத் ஆனார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். 6 டிசம்பர் 1962 -ல் பிறந்தார். பிறப்பு அஹ்மதி ஆவார். 1979ல் ஜாமிஆ அஹ்மதிய்யாவில் சேர்ந்தார். 1987-ல் முபஷ்ஷிர் கோர்ஸ் முடித்து ரப்வா ஜாமிஆவிலிருந்து வெளியேறினார். இந்தோனேஷியா சென்றார். பல்வேறு இடங்களில் பணியாற்றும் வாய்ப்பை அல்லாஹ் இவர்களுக்கு வழங்கியிருந்தான். ஜாமிஆ அஹ்மதிய்யா இந்தோனேஷியாவிலும் பணி செய்தார். அதுபோன்று 2011 வரை ஜாமிஆ அஹ்மதிய்யாவில் இருந்தார்கள். அதற்குப் பிறகு மண்டல முபல்லிக் ஆக இருந்தார். கிழக்கு கல்மன்தான் பகுதியின் முபல்லிக் ஆக இருந்தார். நல்ல அறிவுள்ளவராக இருந்தார் மாஷா அல்லாஹ். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது நூலாகிய தவ்ஸீஹேமராமை இந்தோனேஷிய மொழியில் மொழிபெயர்க்கும் வாய்ப்பு பெற்றார். அதுவன்றி எனது குத்பாக்களை முறைப்படி தொடர்ந்து தர்ஜுமா செய்து வந்தார். மர்ஹூம் மூஸி ஆக இருந்தார். அல்லாஹ் இவரது தகுதியை உயர்த்துவானாக! இவரது உறவினர்களுக்கு பொறுமையை வழங்குவானாக! மனைவி ஒரு மகன் இரு மகள்கள் உள்ளனர்.

இரண்டாவது ஜனாஸா இலண்டனில் வசித்து வந்த நமது பழைய சேவை செய்யக்கூடிய பெண்மணி கண்ணியத்திற்குரிய தாஹிரா வண்டர்மன் சாஹிபா. இவர் நவாப் மஹ்மூது வண்டர்மன் சாஹிபின் மர்ஹூமின் மனைவி ஆவார். இவர் 18 ஜுன் 2012 அன்று தமது 84வது வயதில் வஃபாத் ஆனார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இவர் கண்ணியத்திற்குரிய குலாம் யாஸீன் சாஹிபுடைய மகளாவார். இவரது தாய்வழிப்பாட்டனார் ஹஸ்ரத் குலாம் தஸ்கீர் சாஹிப். இவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது சஹாபியாக இருந்தார்கள். அவரது சகோதரரும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது சஹாபியாகவே இருந்தார்கள். தந்தையார் இந்தியன் சிவில் செர்வண்ட் ஆக இருந்தார். குழந்தைகளுக்கு நல்ல தர்பிய்யத் வழங்கி இருந்தார்கள். காதியானிலேயே மர்ஹூமா கல்வி கற்றார். பிறகு 1947 -ல் கராச்சி சென்று தங்கினார். 1949-ல் மஹ்மூதா வண்டர்மன் சாஹிபுடன் திருமணமாகி இங்கிலாந்து வந்தார். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் உடைய இலண்டன் ஹிஜ்ரத்திற்குப் பிறகு தனிச்செயலரின் அலுவலகத்தில் தொண்டு செய்தார். ஆங்கிலத் தபால் குழுவில் நீண்ட நாட்கள் பணி செய்தார். ஜல்ஸா ஸாலானாவில் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் இவரது பெயரைச் சொல்லி பாராட்டவும் செய்தார்கள். மிகவும் உழைத்து பணி செய்பவர். எப்போதும் பணியை சுமையாகக் கருதியதில்லை. எவ்வளவு

தரப்பட்டாலும் செய்து கொண்டு வந்து விடுவார். வஃபாத்திற்கு சில நாட்கள் முன்னர் கூட ஏதாவது வேலை கொடுத்து அனுப்புங்கள் என்று உறவினர் ஒருவரை அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தார்கள். எப்போதும் அதிகமாக வேலை தருமாறு கேட்டுக் கொண்டே இருப்பார். பலவீனமும் நோயும் இருந்த போதிலும் மிகவும் உழைப்பவர். ஏதாவது ஒரு காரணத்தால் குறைவாக வேலை கொடுக்கப்பட்டால் வருத்தமுறுவார். எனது கடிதப் பிரிவிலும் நீண்ட காலம் பணி செய்தார். கடந்த 20-22 வருடமாக வேலை செய்து வருகிறார். 9 வருடமாக நான் பார்த்து வருகிறேன். கடிதத்தின் சுருக்கத்தை நல்ல முறையில் தயார் செய்வார். துஆ கடிதங்களின் முக்கிய பாயிண்டுகளை எடுத்து ஹைலைட் செய்வார். படிப்பவருக்கு சிரமம் இருக்காது. கடிதம் எழுதுபவருடைய சரியான கருத்து எனக்கு கிடைத்து விடும். மிகச் சிறப்பம்சம் கொண்டவர். சுருக்கம் தயாரிக்கும் போது எதனை நான் படிப்பது அவசியம் என்று கருதுவாரோ அதனை ஹைலைட் செய்வார். எனவே இவரது கடிதச் சுருக்கம் எல்லாரையும் விட மிக நன்றாக இருக்கும். அதுபோன்று அவருக்கு அல்லாஹ் 20 வருட காலம் குழந்தைகளுக்கு திருக்குர்ஆன் கற்றுத்தர வாய்ப்பு வழங்கியிருந்தான். அக்பாரே அஹ்மதிய்யாவுக்காக உருது கட்டுரைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துத் தருவார். இவரது நினைவாக மூன்று மகள்கள், இரு மகன்கள், பேரன், பேத்தி, மகள் வழியில் மகன் வழியிலும் உள்ளனர். இவரது சந்ததிகளையும் அல்லாஹ் கிலாஃபத்துடனும் ஜமாஅத்துடனும் இணைத்து வைப்பானாக! வாய்ப்பு வழங்குவானாக! இவரது மகன் நதீம் வண்டர்மேன் சாஹிப் அக்பாரே அஹ்மதிய்யாவின் உதவி ஆசிரியராக பணியாற்றுகிறார். அல்லாஹ் மர்ஹூமாவின் தகுதியை உயர்த்துவானாக! இந்த இருவருக்கும் நான் ஏற்கனவே கூறியது போன்று தொழுகைக்குப் பிறகு ஜனாஸா காயிப் தொழுவேன்.

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BAITUR RAHMAN MOSQUE, USA.**

**ON 22.06.2012**

Translated by : Muallim M. NIZAMUDDIN

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456